# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2021
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2021**
The Australian Society of Graduate Tamils (ASoGT)

இணைப்பு: 2

## விண்ணப்பப் படிவம் APPLICATION FORM

**(விண்ணப்பங்கள் எமது இணையத்தளத்தினுடாக (https://www.tamilcompetition.org.au/comp/login) சமர்ப்பிக்கப்படுவதை ஊக்கப்படுத்தவிரும்புகின்றோம்.)**

குடும்பப் பெயர்:……………….............. Family Name:……………………………….(in English)

முதற் பெயர்:………………………… First Name:………………………………….(in English)

பிறந்த திகதி: ………………………………… பிறந்தநாடு:…………………………….

Gender: .................. Telephone :………………....... Mobile Phone :………….........

Address:…………………………………………………………………………

E-mail address:…………………………

**அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் பிறக்காதவராயின் நீங்கள் குடிபெயர்ந்த திகதி:**…….......

**அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் கடந்தமூன்று வருடங்களும் தொடர்ச்சியாக வாழ்ந்து இருக்கின்றீர்களா?**

……………...**இல்லாவிட்டால் இதுபற்றிய விபரம்: ………………**

**……………………..........................................................................................................**

நீங்கள் கற்கும் தமிழ்ப் பாடசாலை:…………………………………………………….....

2021 இல் பங்குபற்றும் போட்டி / போட்டிகள்:

| சாதாரண போட்டிகள் | விசேட போட்டிகள் | குழுநிலைப் போட்டிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

செலுத்த வேண்டிய கட்டணம்:

விண்ணப்பக் கட்டணம் = **$5.00** +

போட்டிகளிற்கான கட்டணம் (**போட்டிகளின் எண்ணிக்கை x $5.00**) = ………..

மொத்தக் கட்டணம் = ………..

தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளின் விதிமுறைகள் அனைத்தையும் வாசித்து விளங்கிக் கொண்டேன் என்றும், இந்த விண்ணப்பப் படிவத்தின் மறுபக்கத்தில் உள்ள விதிமுறைகளுக்கு இணங்கி இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் போட்டி விதிகளுக்கிணங்க, எனது விண்ணப்பப் படிவம் சரியான விபரங்களைக் கொண்டுள்ளதெனவும் உறுதி செய்கின்றேன். இதிலே தரப்பட்ட ஏதேனும் விபரம், அல்லது விபரங்கள் பிழையென அறியவரும் வேளையில் நான் போட்டியிலிருந்து விலக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

கையொப்பம் (பங்குபற்றுபவர் / பெற்றோர்) திகதி

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

ஆசிரியர் / அதிபரின் கையொப்பம் திகதி

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2021
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2021
The Australian Society of Graduate Tamils (ASoGT)

## பொது விதிமுறைகள்: தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2021

1. போட்டியாளரின் வயது 01-07-2021 இல் உள்ளபடி கணிக்கப்படும்.
2. இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும், போட்டி வகைகளும் தரப்பட்டுள்ளன.
3. போட்டியாளர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்கான எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டி, போட்டியாளரின் பிரிவில் நடைபெற்றாலும், அவர் தமது வயதுப் பிரிவிலும் பார்க்கக் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் அப்போட்டியிலும் பங்குபற்றலாம். மேற்குறிப்பிட்ட விதிக்களுக்கமையக் குறித்த ஒரு போட்டியில், போட்டியாளர் ஏதாவது ஒரு வயதுப் பிரிவில் மட்டுமே பங்குபற்றலாம். போட்டியாளர் ஒரு எழுத்தறிவுப் போட்டியில் மட்டுமே பங்குபற்றலாம்.
4. 2019ம் ஆண்டு மாநில நிலையிலேயோ தேசிய நிலையிலேயோ நடைபெற்ற போட்டிகளில் அதி உயர் பரிசைப் பெற்ற போட்டியாளர் (மாநில நிலையில் மட்டும் நடைபெறும் போட்டிகளில் முதலாவது பரிசு அல்லது தேசியப் போட்டிகளில் தங்கப் பதக்கம்) 2021ம் ஆண்டு அதே போட்டியிலேயோ அல்லது அதே வகைப் போட்டியிலேயோ பங்கு பெற்ற அனுமதிக்கப்படுவார். எனினும் அப்போட்டியாளர் மாநில நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறமுடியாது அத்துடன் அப்போட்டியாளர் தேசியப் போட்டியில் பங்கு பற்றவும் முடியாது. பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலதிக விபரத்திற்கு "கடந்த வருடம் தேசிய போட்டிகளில் அல்லது மாநிலப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள்" என்ற பகுதியைப் பார்க்கவும்.
5. 2019ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் 2021ம் ஆண்டு கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டியிற் பங்குபற்றி எந்த ஒரு பரிசையும் வெல்லமுடியும். தேசிய நிலையில் கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டியிலே தெரிவு செய்யப்பட்டு அதிற் பங்குபற்றித் தங்கப்பதக்கத்தை வெல்லமுடியும்.
6. கடந்த ஆண்டு பாலர் பிரிவு மற்றும் ஆரம்ப பிரிவுக் கவிதை மனனப் போட்டிகளிற் பங்குபற்றி மாநில நிலையிலே முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள், இந்த வருடம் பாலர் பிரிவு மற்றும் ஆரம்பப் பிரிவிற்கான விசேட கவிதை மனனப் (ஆத்திசூடி) போட்டியிற் பங்குபற்றி எந்தப் பரிசையும் வெல்லமுடியும். கடந்த ஆண்டு கீழ்ப் பிரிவு கவிதை மனனப் போட்டியிற் பங்குபற்றித் தேசிய நிலையிலே அல்லது மாநில நிலையிலே முதற் பரிசு பெற்ற போட்டியாளர்கள் இந்த வருடம் மத்திய பிரிவு விசேட கவிதை மனனப் (திருக்குறள்) போட்டியிற் பங்குபற்றி எந்தப் பரிசையும் வெல்லமுடியும்.
7. "விசேட எழுத்தறிவுப் போட்டி - இளைஞர் பிரிவு" ஓர் பயிற்சி பரீட்சையாக நடாத்தப்படுவதுடன் பரீட்சை முடிவுகள் தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கு மட்டும் தெரியப்படுத்தப்படும். இப்போட்டிக்கு தேசிய/மாநில நிலையோ பதங்கங்களோ வழங்கப்படாது.
8. அண்மையில் இந்தியா அல்லது இலங்கையிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களுக்கென 6, 8, 10, 12, 15, 18 வயதுக்குட்பட்டவர்கள் என ஆறு பிரிவுகளில் விசேட போட்டிகள் நடாத்தப்படுகின்றன. தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளின் விதிமுறைகளின்படி அவர்கள் சாதாரணப் பிரிவுப் போட்டிகளிற் பங்குபற்றி முதல் மூன்று பரிசில்கள் பெற முடியாதுவிடின், இவர்கள் விசேட, குழுநிலைப் போட்டிகளிற் பங்குபற்றி முதல் மூன்று பரிசில்கள் பெற முடியும். (மேலதிக விபரத்துக்கு "அண்மையில் அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்திற் குடியேறிய போட்டியாளர்கள்" என்ற பகுதியைப் பார்க்கவும்). இது பற்றிய சந்தேகங்கள் இருப்பின் விண்ணப்பிப்பதற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
9. போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளிற் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சிகள் (கடவுச்சீட்டு அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) தேவைப்படின் காண்பிக்கப்பட வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப்பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.
10. 2019ஆம் ஆண்டுப் போட்டிகளிற் சுழல்/வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2021 இல் தத்தமது போட்டிகளுக்கு முன்பாகக் கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2021 போட்டிகளிற் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.
11. ஒவ்வொரு போட்டியாளரிடமும் விண்ணப்பக் கட்டணமாக **$5.00** உடன் ஒவ்வொரு போட்டிக்கும் தலா **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.
12. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாநில விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் மாநில இணைப்பாளரிற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். போட்டிக்கான கட்டணம் விண்ணப்பப் படிவத்துடன் செலுத்தப்படவேண்டும்.
13. தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் எமது சங்கத்தின் இணையத் தளமான **www.tamilcompetition.org.au** இல் பெற்றுக் கொள்ளலாம்.
14. போட்டியாளரின் புகைப்படங்களைத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டியின் இணையதளத்தில், சஞ்சிகைகளில், முக நூலில் பிரசுரிப்பதற்கு அனுமதி வழங்குகின்றோம்.

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**கட்டணம்:** …………… செலுத்தப்பட்டது / செலுத்தப்படவில்லை

**குறிப்பு:**……………………………………………………………………………………………

**போட்டி இணைப்பாளர்** :………………………………….**திகதி** :………………………………